# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் செய்தி மடல்

செய்தி 19 மடல் 4 ஏப்ரல் 2019 ₹1.00

## இந்தியக் கால்நடை மருத்துவக் குழுவின் முதலாவது அட்டவணையில் பல்கலைக்கழகக் கல்லூரிகள் இடம்பெற்றன



கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாடு




கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி

மத்திய அரசு மற்றும் அகில இந்தியக் கால்நடை மருத்துவக் குழுவால் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றில் 2012–13ஆம் கல்வியாண்டு முதல் மாணவர்கள் சேர்கைக்கான அனுமதியும், முதலாமாண்டு முதல் நான்காமாண்டு வரை மாணவர்கள் படிப்பதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது. தற்போது, மத்திய அரசின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத் துறையின் வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் ஜி.எஸ்.ஆர்/1296 (இ), 08.03.2019 நாளிட்ட அறிவிப்பின்படி தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்மூலம் ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் வழங்கப்படும் பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். பட்டமானது அகில இந்தியக் கால்நடை மருத்துவக் குழுவின் முதலாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டு, அதற்கான திருத்தங்கள் அகில இந்தியக் கால்நடை மருத்துவக் குழு விதி 1984இன் (52ஆவது பிரிவு) முதல் அட்டவணையில் மேற்கொள்ளப்பட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## தேசியப் பயிலரங்கு




பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்ககத்தில் செயல்பட்டு வரும் பல்கலைக்கழகம் மற்றும் உயிர்த் தொழில்நுட்பத் துறையின் நாயின ஆராய்ச்சி மையம் மற்றும் இணைப்பகத் திட்டக் கண்காணிப்புப் பிரிவுமூலம் "நாயினத்தில் புற்று நோய்க்கட்டிகள் மற்றும் இரத்த மாற்று மருத்துவ ஆய்வில் அண்மைக்கால முன்னேற்றங்கள்" குறித்த தேசியப் பயிலரங்கு, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 20.03.2019 முதல் 22.03.2019 வரை நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலச்சந்திரன் அவர்கள் பயிலரங்கைத் துவக்கிவைத்துப் பயிலரங்கக் கையேடு வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் க.சரத்சந்திரா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். முன்னதாகச் சிகிச்சையியல் இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த மொத்தம் 28 பேர் பயிலரங்கில் பங்கேற்றனர். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அவர்கள் "சிறிய பிராணிகளின் புற்றுநோய் பற்றிய ஆய்வில் செல்லியல்" குறித்து 21.03.2019அன்று விரிவுரை வழங்கினார். அமெரிக்காவின் ஒக்லகாமா மாநிலப் பல்கலைக்கழகத்தின் முனைவர் ஆஷிஷ் ரஞ்சன் அவர்கள் "ஸ்கைப்" காணொலி மூலம் விரிவுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடினார். 22.03.2019அன்று நடைபெற்ற பயிலரங்கின் நிறைவு விழாவில் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி, நிறைவுரை ஆற்றினார்.

## வன விலங்குகளில் ஒட்டுண்ணித் தொற்றுக்களைத் திரட்டுவதற்கு போல்டுஸ்கோப்

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் வனவிலங்கு அறிவியல் துறையில் செயல்பட்டு வரும் “தமிழ்நாட்டில் உள்ள வனவிலங்குகளில் ஒட்டுண்ணித் தொற்றுக்களைத் திரட்டுவதற்கு போல்டுஸ்கோப்பை ஒரு கருவியாகப் பயன்படுத்துதல்” எனும் அறிவியல் தொழில்நுட்பத் துறையின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் தேசியப் பயிலரங்கு 12.03.2019 மற்றும் 26.03.2019ஆம் நாள்களில் நடத்தப்பட்டது. பயிலரங்கை அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் க.சரத்சந்திரா அவர்கள் துவக்கிவைத்தார். உயிரியல் பூங்கா மற்றும் வனத் துறையில் பணிபுரியும் கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை மருத்துவம் பயிலும் மாணவர்கள் உட்பட மொத்தம் 27 பேர் பயிலரங்கில் கலந்து கொண்டனர்.

## பாடப்பொருள் உருவாக்குதல் பயிலரங்கு

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வேளாண் உயர் கல்வித் திட்டத்தின்கீழ் “மாணவர்களை முதன்மைப்படுத்திய கற்றல் பாடங்களை உருவாக்குதல்” குறித்த பயிலரங்கு, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 18.03.2019 முதல் 20.03.2019 வரை



  நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் பயிலரங்கைத் துவக்கிவைத்தார். இலண்டன் ராயல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் வாழ்நாள் மற்றும் தனித்துவக் கால்நடை மருத்துவக் கல்வி மையப் பேராசிரியர் டாக்டர் அயோனா சில்வா பிளெட்சர் மற்றும் அதே கல்லூரியின் கால்நடை அடிப்படை அறிவியலின் முன்னாள் தலைவர் டாக்டர் நைகல் கூடோ ஆகியோர் பயிலரங்கில் வல்லுநர்களாகச் செயல்பட்டனர். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியைச் சார்ந்த 30 பேராசிரியர்கள் பயிலரங்கில் பங்கேற்றனர்.
- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 21.03.2019 முதல் 23.03.2019 வரை கல்லூரிப் பேராசிரியர்களுக்கு “பாடப்பொருள் உருவாக்குதல்” குறித்த பயிலரங்கு நடத்தப்பட்டது. திட்டத்தின் இணை ஆராய்ச்சியாளர் மற்றும் இணைப்பு அலுவலர் முனைவர் பி. செல்வராஜ் அவர்கள் வரவேற்புரை




  ஆற்றினார். திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் மற்றும் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் சிறப்புரை வழங்கினார். நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் தலைமை வகித்தார். இலண்டன் ராயல் கால்நடை மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்கள் டாக்டர் அயோனா சில்வா பிளெட்சர் மற்றும் டாக்டர் நைகல் கூடோ ஆகியோர் பயிலரங்க வல்லுநராகச் செயல்பட்டனர். பயிலரங்கானது கற்றலினால் வரும் பயன்களின் முக்கியத்துவம், கற்றுக்கொள்வதற்கு வேண்டியவற்றை அடையாளங்காணல், கற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள் இவற்றை முன்னெடுத்தது.

## தேசியப் பயிற்சி



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைச் சிகிச்சைத் துறையில் செயல்பட்டு வரும் ஆசிரியர் உயர்நிலைப் பயிற்சி மையம்மூலம் “கால்நடை மருத்துவத்தில் சிகிச்சை நடைமுறைகள் மற்றும் நோய் கண்டறியும் இமேஜிங் தொழில்நுட்பத்தில் அண்மைக்கால முன்னேற்றங்கள்” குறித்த 21 நாள் தேசியப் பயிற்சி, 18.01.2019 முதல் 07.02.2019வரை நடைபெற்றது. பயிற்சியின் நிறைவு விழாவில் பங்கேற்ற பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள், பயிற்சிக் கையேடு வெளியிட்டுப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கித் தலைமையுரை ஆற்றினார். நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன், சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் ஆகியோர் பங்கேற்றனர். ஆசிரியர் உயர்நிலைப் பயிற்சி மைய இயக்குநர் மற்றும் கால்நடைச் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம்.ஜி. ஜெயதங்கராஜ் அவர்கள் பயிற்சி அறிக்கை அளித்தார். பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த 25 பேர் பயிற்சியில் பங்கேற்றனர்.

## வேளாண் அறிவு மேலாண்மைக் கருவிகள் பற்றிய உணர்திறன் பயிலரங்கு

பல்கலைக்கழக நூலகம்மூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வேளாண் உயர் கல்வித் திட்ட நிதியுதவியுடன் ஆராய்ச்சியாளர் மற்றும் பேராசிரியர்கள் நலன் கருதி “வேளாண் அறிவு மேலாண்மைக் கருவிகள்” பற்றிய உணர்திறன் பயிலரங்கு, 27.03.2019 அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டது. பயிலரங்கின் துவக்க விழாவில் பங்கேற்ற பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலச்சந்திரன் அவர்கள் பயிலரங்கக் கையேடு

வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். அவர் தமது உரையில் பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் அனைத்து ஆராய்ச்சி வெளியீடுகளும் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும் என்றும் பயிலரங்கில் பங்கேற்றிருப்பவர்கள் தங்களின் வெளியீடுகளை எண்ணியல் வடிவாக்க வேண்டும்



என்றும் கேட்டுக்கொண்டார். திட்டத் தலைமை ஆய்வாளர் முனைவர் கே. வீராஞ்சநேயலு அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபகாரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பயிலரங்க நிறைவு விழாவிற்குத் தலைமை வகித்த பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள் பயிலரங்கக் கையேட்டின் குறுவட்டுகளை வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் க.சரத்சந்திரா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மொத்தம் 126 பேர் பயிலரங்கில் பங்கேற்றனர். பல்கலைக்கழக நூலகர் முனைவர் ஜி. ரத்தினசபாபதி அவர்கள் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

## கால்நடை அறிவியல் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பு – துவக்க விழா



தமிழ்நாடு அரசின் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவன நிதியுதவியுடன் பல்கலைக்கழக மைய ஆய்வகக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள "கால்நடை அறிவியல் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பை" பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலச்சந்திரன் அவர்கள் 06.03.2019 அன்று துவக்கிவைத்தார். நிகழ்ச்சியில் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ், கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஜி. தினகர் ராஜ் மற்றும் பிற இயக்குநர்கள் பங்கேற்றனர். துவக்க விழாவிற்குப் பின் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பில் நான்கு துவக்கநிலை நிறுவனங்கள் சேர்க்கப்பட்டு, அதற்கான ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

## சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி நாள், விளையாட்டுப் போட்டி விழா, விடுதி நாள் மற்றும் முத்தமிழ் விழா



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் விளையாட்டுப் போட்டி விழா மற்றும் கல்லூரி நாள் விழா 25.03.2019 அன்று நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற வருமான வரித் துறை ஆணையர் முனைவர் ஜி.எம். தாஸ், இ.நி.ப., அவர்கள் கல்லூரி ஆண்டு மலர் வெளியிட்டுக் கல்வியில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் கல்லூரி ஆண்டறிக்கை வழங்கினார். கல்லூரியின் மாணவர் மன்றத் துணைத் தலைவர் முனைவர் ப. ஸ்ரீராம் அவர்கள் மாணவர்களின் கலைநிகழ்ச்சி பற்றி அறிக்கை அளித்தார். முனைவர் சபிஹா ஹயாத் பாஷா அவர்கள் கல்லூரி ஆண்டு மலர் குறித்துப் பேசினார். முன்னதாக, இளநிலைப் பட்ட இறுதியாண்டு மாணவி செல்வி கவிரத்னா வரவேற்புரை ஆற்றினார். விளையாட்டுப் போட்டியின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற திரு. தலைவன் சற்குணம் அவர்கள் விழாவைத் துவக்கிவைத்தார். விழாவில் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ப. தங்கராஜு அவர்கள் பங்கேற்றுத் தம்முடைய அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் க. சரத்சந்திரா அவர்கள் வாழ்த்திப் பேசினார். பேராசிரியர் முனைவர் அ. சங்கரன் அவர்கள் மாணவர்கள் பங்கேற்ற விளையாட்டுப் போட்டிகள் பற்றி அறிக்கை அளித்தார். நிறைவாக, இளநிலைப் பட்ட இறுதியாண்டு மாணவர் செல்வன் பி.என். பாட்டில் நன்றி கூறினார்.



கல்லூரி விடுதி நாள் மற்றும் முத்தமிழ் விழா – “செங்காந்தள்–18”, 23.03.2019அன்று கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றினார். விழாவில் முதன்மை விருந்தினராகப் பங்கேற்ற கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் மருத்துவர் நா. வில்வசேகரன் அவர்கள் “அந்திமழை–2018” வெளியிட்டு, பரிசுகள் வழங்கி உரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரியின் விடுதிக் காப்பாளர் முனைவர் ந. குமாரவேலு அவர்கள் விடுதி ஆண்டறிக்கை வழங்கினார். கலைமகள் கழகச் செயலாளர் மாணவர் செல்வன் மோ. கோகுல் கலைமகள் கழகச் செயல்பாடுகளை விவரித்தார். முன்னதாக, இளநிலைப் பட்ட இறுதியாண்டு மாணவர் செல்வன் பி.ந. பாட்டில் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரியின் மகளிர் விடுதிப் பிரதிநிதி மாணவி செல்வி மு. சல்மா பேகம் நன்றி கூறினார்.

## ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி நாள், விடுதி நாள், விளையாட்டுப் போட்டி விழா மற்றும் முத்தமிழ் விழா



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி நாள் மற்றும் விடுதி நாள் விழா 15.03.2019அன்று கொண்டாடப்பட்டது. விழாவிற்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் தலைமை வகித்து, உரையாற்றினார். மேலும், ஆண்டுத் தேர்வுகளில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி முதல்வர் மருத்துவர் குமுதா லிங்கராஜ் அவர்கள் கல்லூரி ஆண்டு மலர் வெளியிட்டு, பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். முன்னதாகக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவக்குமார் அவர்கள் கல்லூரி ஆண்டறிக்கை வாசித்தார். மாணவர் மன்றத் துணைத் தலைவர் முனைவர் சி.பந்தேஸ்வரன், விடுதிக் காப்பாளர் முனைவர் எஸ். பாலகிருஷ்ணன், கல்லூரி ஆண்டு மலர் ஆசிரியர் பி. செல்வராஜ் ஆகியோர் தத்தம் அறிக்கை சமர்ப்பித்தனர். தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிக் கண்காணிப்பாளர் மருத்துவர் ஏ. பாரதி அவர்கள் விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார். முன்னதாக, மாணவர் பிரதிநிதி செல்வி க. செல்வலட்சுமி வரவேற்புரை ஆற்றினார். இறுதியாக, மாணவர் பிரதிநிதி செல்வன் சி.ரவிகுமார் நன்றி நல்கினார்.



கல்லூரியில் முத்தமிழ் விழா 14.03.2019அன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவக்குமார் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து, உரையாற்றினார். திரைப்படப் பாடலாசிரியர் கவிஞர் நெல்லை திரு. ஜெயந்தா அவர்கள் ‘ஆறாம் விரல்’ – மாணவர் இதழை வெளியிட்டார். கதாசிரியர் திருமதி கலைச்செல்வி அவர்கள் விழாவில் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார். முன்னதாக, தமிழ்ப் பேரவையின் தலைமை ஆலோசகர் முனைவர் ஆ. குமரவேள் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். தமிழ்ப் பேரவைச் செயலாளர் மருத்துவர் அ. இளமாறன் தமிழ் மன்ற அறிக்கை சமர்ப்பித்தார். ஆறாம் விரல் – மாணவர் இதழின் ஆசிரியர் முனைவர் கி. ஜெகதீசன் இதழ் குறித்து அறிமுகவுரை வழங்கினார். இறுதியாக, தமிழ்ப் பேரவையின் மாணவர் செயலாளர் செல்வன் அ.ரா. அப்பாஸ் நன்றி கூறினார்.

கல்லூரியின் விளையாட்டுப் போட்டி விழா–2018–2019, 14.03.2019அன்று கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். விழாவில் தஞ்சாவூர், உயர்கல்வித் துறையின் உதவி இயக்குநர் எம்.ராஜாராமன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, விளையாட்டுப் போட்டிகளைத் துவக்கிவைத்து, பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி உரையாற்றினார். பல்கலைக்கழகத்தின ஓய்வுபெற்ற உடற்கல்வி இயக்குநர் முனைவர் ஏ.எம். வெங்கடேசன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக, விளையாட்டுப் போட்டிச் செயலாளர் முனைவர் எஸ். முத்துகிருஷ்ணன் வரவேற்புரை ஆற்றினார். உடற்கல்வி உதவி இயக்குநர் முனைவர் கே.பி. சரவணன் விளையாட்டுப் போட்டியின் ஆண்டறிக்கை சமர்ப்பித்தார். கல்லூரியின் இறுதியாண்டு மாணவர் பிரதிநிதி செல்வன் எஸ். ரமேஷ் நன்றி கூறினார்.

### டாக்டர் ஏ. சீனிவாசன் நினைவு விரிவுரை

பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்ககம்மூலம் 15.03.2019அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் டாக்டர் ஏ. சீனிவாசன் நினைவு விரிவுரைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன், அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் க. சரத்சந்திரா ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். சென்னை, ஃபேர்ம் மருத்துவமனையின் லேப்ராஸ்கோப்பிமற்றும்கருத்தரிக்காமைநீக்கநிபுணர்டாக்டர் மாலா ராஜ் அவர்கள் லேப்ராஸ்கோப்பியில் பயன்படுத்தப்படும் புதிய தொழில்நுட்பங்களை எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் நாமக்கல், திருநெல்வேலி மற்றும் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த பேராசிரியர்கள், முதுநிலைப் பட்ட மாணவர்கள் மற்றும் இளநிலைப் பட்ட மாணவர்கள் காணொலிக் காட்சிமூலம் பங்கேற்றுக் கலந்துரையாடினர். சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கே. குலசேகர் அவர்கள் நன்றி கூறினார்.

### துணைவேந்தர் பங்கேற்பு

**7ஆவது பான் காமன்வெல்த் கால்நடை மருத்துவக் கருத்தரங்கு**



பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள், 05.03.2019அன்று பெங்களூரு, தேசியக் கால்நடை உணவியல் மற்றும் உடலியங்கியல் நிலையத்தில் நடைபெற்ற காமன்வெல்த் கால்நடை மருத்துவச் சங்கத்தின் 7ஆவது பான் காமன்வெல்த் கால்நடை மருத்துவக் கருத்தரங்கில் பங்கேற்று, கால்நடை மற்றும் கோழியின நலம் மற்றும் உற்பத்தி குறித்த அமர்வுக்குத் தலைமை வகித்தார்.

**அறிவியல் ஆலோசனை குழுக்கூட்டம்**



பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் 02.03.2019அன்று பெங்களூருவில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசியக் கால்நடை நோய்த்தொற்றியல் மற்றும் நோய்த் தகவலியல் நிலையத்தில் நடைபெற்ற அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அதன் தலைவராகப் பங்கேற்றார்.

### பயிற்சி முகாம்

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை நோய்க்குறியியல் துறை சார்பாக, “கோழிகளில் பிரேதப் பரிசோதனை மற்றும் நோய்களைக் கண்டறிதல்” பற்றிய பயிற்சி, சுகுணா புட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் பணிபுரியும்



  10 கால்நடை மருத்துவர்களுக்கு 26.03.2019 முதல் 29.03.2019 வரை அளிக்கப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் பயிற்சியின் துவக்க விழா மற்றும் நிறைவு விழாவிற்குத் தலைமை வகித்து பயிற்சிக் கையேடு வெளியிட்டார்.
- காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் பண்ணையாளர்களுக்கான வாத்து வளர்ப்பு பற்றிய செய்முறைப் பயிற்சி 27.02.2019 அன்று நடத்தப்பட்டது. பயிற்சியில் 17 பேர் கலந்து கொண்டனர்.

### திறன் மேம்பாட்டுப் பயிற்சி

தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில்நுட்ப மன்ற நிதியுதவியில் “மதிப்புக் கூட்டிய பால் பொருள்கள் பற்றிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி”, திருச்சிராப்பள்ளி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நடத்தப்பட்டது. பயிற்சியின் முதல் மற்றும் இரண்டாவது தொகுதியின் துவக்க விழா முறையே 25.02.2019 மற்றும் 04.03.2019ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. திருச்சிராப்பள்ளி, மண்டல இணை இயக்குநர் (கால்நடைப் பராமரிப்பு) மருத்துவர் பி. நெடுஞ்செழியன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். பயிற்சியின் முதலாவது தொகுதி 25.02.2019 முதல் 01.03.2019 வரையிலும், இரண்டாவது தொகுதி 04.03.2019 முதல் 08.03.2019 வரையிலும் நடத்தப்பட்டன. 01.03.2019அன்று நடைபெற்ற முதல் தொகுதியின் நிறைவு விழாவிற்குத் திருச்சிக் கோட்ட உதவி இயக்குநர் (கால்நடைப் பராமரிப்பு) மருத்துவர் எஸ்.மருதைராஜ் அவர்கள் தலைமை வகித்துப் பயிற்சிக் கையேடு வெளியிட்டார். 08.03.2019அன்று நடைபெற்ற இரண்டாவது தொகுதியின் நிறைவு விழாவிற்குத் திருவரங்கக் கோட்ட உதவி இயக்குநர் மருத்துவர் டி. சுரேஷ் கிறிஸ்டோபர் அவர்கள் தலைமை வகித்துப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

### கண்டுணர் பயணம்

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் கரூர் மாவட்ட ஆத்மா நிதியுதவியுடன் கரூர் வட்டாரத்தைச் சார்ந்த 20 முன்னோடி விவசாயிகளுக்கு மாநிலங்களுக்கு இடையிலான கண்டுணர் பயணம் மற்றும் பயிற்சி, 04.03.2019 முதல் 08.03.2019 வரை ஏற்பாடு செய்யப்பட்டது.

### உலகக் காசநோய் தின விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமும் கரூர், செயின்ட் உலக மனித கல்வி மற்றும் மேம்பாடு நிறுவனமும் இணைந்து, உலகக் காசநோய் தினத்தை நினைவுகூரும் வகையில் இரண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை 15.03.2019 மற்றும் 25.03.2019ஆம் நாள்களில் முறையே கரூர், ஜெயராம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் சாரதா நிகேதன் மகளிர் கல்லூரிகளில் நடத்தின. நிழ்ச்சிகளில் கரூர், காசநோய்த் தடுப்புப் பிரிவின் துணை இயக்குநர் மருத்துவர் பி. நிர்மலா, மாவட்டக் காசநோய் மைய மருத்துவர் பி. பாண்டியன், மாவட்டக் காசநோய் ஒழிப்புத் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. ஆர். அப்துல்லா, பல்கலைக்கழகப் பயிற்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பெ. வசந்தகுமார் ஆகியோர் பங்கேற்றுக் கலந்துரையாடினர். மொத்தம் 650 கல்லூரி மாணவர்கள் நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்நிகழ்வியல் துறையால் உலகக் காசநோய் தினத்தை முன்னிட்டு 24.03.2019அன்று ஒரத்தநாடு, அரசுப் பொது மருத்துவமனை மற்றும் கல்லூரி வளாகத்தில் “விலங்குகள்மூலம் மனிதனுக்குப் பரவும் காசநோய்” குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. அரசுப் பொது மருத்துவமனையின் மருத்துவர் சு. நவீன், கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்நிகழ்வியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சி. பாலகிருஷ்ணன் ஆகியோர் முகாமில் பங்கேற்றுப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடினர்.
- உலகக் காசநோய் தினத்தை முன்னிட்டு நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 25.03.2019அன்று கல்லூரி மாணவர்கள் மற்றும் அலுவலர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் அறிமுகவுரை நிகழ்த்தினார். மாவட்டக் காசநோய் மைய மருத்துவர் எஸ். ஆனந்தகுமார் அவர்கள் உரையாற்றினார். மாவட்டக் காசநோய் மையத் துணை இயக்குநர் மருத்துவர் எஸ்.கணபதி அவர்கள் பல்வேறு வினாடிவினாப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார்.

### விவசாயிகளுக்கு மழைமானி வழங்கல்

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வகத்தில் இயங்கிவரும் வேளாண் வானிலை ஆலோசனை மையம் மூலம் நாமக்கல் ரோட்டரி



சங்க நிதியுதவியில் நாமக்கல் மாவட்டத்தின் 26 முன்னோடி விவசாயிகளுக்கு மழைமானியைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் 01.03.2019அன்று வழங்கினார். ஒவ்வொரு வட்டத்திலும் துல்லிய வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பை முன்னெடுக்கும் வகையில் மழைமானிகள் வழங்கப்பட்டன. பல்கலைக்கழகத்தின் மருத்துவ மேலாண்மைக் குழு உறுப்பினர் திரு. எல். விஜயன், ரோட்டரி சங்கத் தலைவர் திரு. வா. கோபிநாத் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாகக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். வேளாண் வானிலை ஆலோசனை மைய இணைப்பு அலுவலர் முனைவர் அ.நடராஜன் அவர்கள் திட்டம் குறித்து விளக்கினார். நாமக்கல், வேளாண் அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந. அகிலா அவர்கள் நன்றி கூறினார். நாமக்கல் மாவட்டத்தின் 15 வட்டங்களைச் சார்ந்த 50 முன்னோடி விவசாயிகள் மற்றும் கல்லூரிப் பேராசிரியர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

### முன்னோடி விவசாயி விருது




நாமக்கல், வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பயிற்சிபெற்று, பல்கலைக்கழகம்மூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் முன்னோடி விவசாயி விருதுக்குப் பரிந்துரை செய்யப்பட்ட நாமகிரிப்பேட்டை வட்டம், அய்யாகவுண்டம்பட்டியைச் சார்ந்த திரு. பெ. சரவணன் அவர்களுக்கு இந்திய வேளாண் ஆராய்ச்சி நிலையத்தின் முன்னோடி விவசாயி விருது–2019, இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகத் தலைமை இயக்குநர் முனைவர் திரிலோசன் மகாபத்ரா அவர்களால் புதுதில்லியில் 05.03.2019 முதல் 07.03.2019 வரை நடைபெற்ற “தேசிய வேளாண் விழா–2019”இல் வழங்கப்பட்டது. இவ்விருதானது ஒருங்கிணைந்த பண்ணையத்துடன் இணைந்த அங்ககக் காய்கறிகள் சாகுபடித் தொழில்நுட்பத்திற்காக வழங்கப்பட்டது,

### உலகத் தண்ணீர் தினம்

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் நிகழ்வியல் துறையால் 22.03.2019அன்று கால்நடைச் சிகிச்சை வளாகத்தில் "உலகத் தண்ணீர் தினம்" கடைப்பிடிக்கப்பட்டது. நிகழ்ச்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் துவக்கிவைத்தார். கல்லூரிப் பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### மகளிர் தின விழா

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மகளிர் தின விழா 08.03.2019அன்று கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் விழாவினைத் துவக்கிவைத்தார். கால்நடை நுண்ணுயிரியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் டி. லூர்து ரீட்டா, நிர்வாக அலுவலர் திருமதி ப. சாமுண்டீஸ்வரி ஆகியோர் விழாவிற்குத் தலைமையேற்றனர். விழாவில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

### ரோட்டரி சங்கச் சின்னம் தாங்கிய கல் திறப்பு

1984–85இல் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டதில் பங்காற்றிய நாமக்கல் ரோட்டரி சங்கத்தை அங்கீகரிக்கும் வகையில் ரோட்டரி சங்கச் சின்னம் தாங்கிய கல் கல்லூரியில் வைக்கப்பட்டது. அண்மையில் நாமக்கல் ரோட்டரி சங்கத்தால் அந்தக் கல் புதுப்பிக்கப்பட்டுப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்களால் 01.03.2019அன்று திறந்துவைக்கப்பட்டது.

### விருது

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஒட்டுண்ணியியல் துறைப் பேராசிரியர் முனைவர் சி.சௌந்தரராஜன் அவர்கள், தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறையின் கீழ் செயல்படும் அறிவியல் நகரம்மூலம் 19.02.2019அன்று கால்நடை மருத்துவ அறிவியல் புலத்தில் 2017ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதுநிலை அறிவியலாளர் விருது அளித்துச் சிறப்பிக்கப்பட்டார்.

### வெண்கலப் பதக்க விருது



பிலோரஸ் நாட்டின் பிலோருசியன் ஒலிம்பிக் மையத்தில் 31.07.2018 முதல் 09.08.2018 வரை நடைபெற்ற 4ஆவது உலக வலைப்பந்துப் போட்டியில் பங்கேற்ற இந்திய வலைப்பந்துக் குழுவில் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இளநிலைப் பட்ட இரண்டாம் ஆண்டு மாணவர் செல்வன் எஸ். அபிஷேக் பங்கேற்று, வெண்கலப் பதக்கம் வென்றார்.

### மருந்து உற்பத்தியாளர் சந்திப்பு

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் மருந்தியல் மற்றும் நச்சியல் துறைமூலம் இளநிலைப் பட்டம் பயிலும் இறுதியாண்டு மாணவர்களுக்காக மருந்து உற்பத்தியாளர் சந்திப்பு 09.03.2019அன்று நடத்தப்பட்டது. சந்திப்பில் 19 மருந்து உற்பத்தி நிறுவனங்கள் பங்கேற்றன. அவற்றில் 16 நிறுவனங்கள் தங்களின் மருந்துகளைக் காட்சிக்கு வைத்து, அவை பற்றிய விளக்கம் அளித்தன.

### மாணவர்களுக்கான பயிற்சிகள்

- பல்கலைக்கழகத்தின் எஸ்சி/எஸ்டி சிறப்புப் பிரிவுமூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக வளர்ச்சி நிதியில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் பயிலும்




  எஸ்சி/எஸ்டி பிரிவைச் சார்ந்த இளநிலைப் பட்ட மற்றும் முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கு "ஊக்கப்படுத்தல் விரிவுரை மற்றும் பயிலரங்கு" 09.03.2019அன்று நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலச்சந்திரன் அவர்கள் பயிலரங்கைத் துவக்கிவைத்து, "கால்நடை மருத்துவ அறிவியலுக்கான வினா வங்கிப்" புத்தகத்தை வெளியிட்டார். நிகழ்ச்சியில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் பங்கேற்றார். மேலும், தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றிய மேலாண் இயக்குநர் திரு. சி. காமராஜ், இ.ஆ.ப., சென்னை வருமான வரித் துறை ஆணையர் முனைவர் ஜி.எம். தாஸ், இ.நி.ப., ஆகியோர் ஊக்கப்படுத்தல் விரிவுரை வழங்கினர். பல்கலைக்கழக நூல் வெளியீட்டுப் பிரிவுப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் எதிர்காலத் தேவைகளை அடையாளங்காணல் குறித்த குழு விவாத அமர்வை ஒருங்கிணைத்தார். பயிலரங்கில் மொத்தம் 107 எஸ்சி/எஸ்டி மாணவர்கள் பங்கேற்றனர்.

- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பராமரிப்புப் புள்ளியியல் மற்றும் கணினிப் பயன்பாட்டியல் துறைமூலம் "ஆராய்ச்சி நெறிமுறைகள்" குறித்த பயிற்சி, 2018–19ஆம் ஆண்டில் சேர்ந்த

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.

Licensed to post without prepayment No.TN/PMG(CCR)/WPP-708/2018-2020
REGISTERED No.TN/CC(S)DN/569/18-20

Posted on 30.04.2019 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by Dr. K.N. Selvakumar, Director of Distance Education, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Old No. 327/New No. 485, Anna Salai, Nandanam, Chennai – 600035 on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University, Printed at University Printing Press, Mathur Road, Madhavaram Milk Colony, Chennai – 600051. Editor: Dr. K.N. Selvakumar, Ph.D.

முதுநிலைப் பட்டம் மற்றும் முனைவர் பட்டம் பயிலும் மாணவர்களுக்கு 26.02.2019 மற்றும் 27.02.2019ஆம் நாள்களில் நடத்தப்பட்டது. மொத்தம் 68 மாணவர்கள் (34 முதுநிலைப் பட்டம், 34 முனைவர் பட்ட மாணவர்கள்) பங்கேற்றனர். அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் க. சரத்சந்திரா அவர்கள் பயிற்சியினைத் துவக்கிவைத்துப் பயிற்சிக் கையேடு வெளியிட்டார்.

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் தகவல் தொடர்பு மற்றும் மென்திறன்கள் குறித்த பயிற்சி, கல்லூரியில் இளநிலைப் பட்டம் பயிலும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் 83 பேர் மற்றும் நான்காம் ஆண்டு மாணவர்கள் 63 பேருக்கு முறையே, 04.03.2019–05.03.2019 மற்றும் 06.03.2019–07.03.2019ஆம் தேதிகளில் அளிக்கப்பட்டது.

## செயல்முறைக் கற்றல் பயிற்சித் திட்டம்

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செயல்முறைக் கற்றல் பயிற்சித் திட்டத்தை நிறைவு செய்த மாணவர்களுக்கு இலாபத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கினார். தீவன உற்பத்தித் தொழில்நுட்பம் மற்றும் வணிக முறையிலான வெண்பன்றி வளர்ப்பு தொடர்பான செயல்முறைக் கற்றல் பயிற்சித் திட்டங்கள்மூலம் ஈட்டப்பட்ட இலாபத் தொகையான ரூபாய் 1,33,713/– மற்றும் ரூபாய் 1,05,220/– மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன், திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் எம்.ஆர். புருஷோத்தமன் மற்றும் முனைவர் கே. சிவகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

## பணி ஓய்வு



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் அலுவலகத்தின் உதவிக் கணக்கு அலுவலர் திருமதி கே. பிபிஜன் அவர்கள் 31.03.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 29.03.1961இல் பிறந்த இவர், 29 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையக் கண்காணிப்பாளர் திரு. கே. கனகராஜ் அவர்கள் 31.03.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 13.06.1961இல் பிறந்த இவர், 33 ஆண்டும் 06 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் திறனில்லாப் பணியாளர் (சிறப்பு நிலை) திரு. ஜி.முருகேசன் அவர்கள் 31.03.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 07.03.1959இல் பிறந்த இவர், 33 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகத்தின் நிதி அலுவலக உடனாள்(முதுநிலை) திரு. எஸ்.வினாயகம் அவர்கள் 31.03.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 04.03.1959இல் பிறந்த இவர், 23 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சி. பாலசந்திரன், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் க.ந. செல்வக்குமார்
தொலைநிலைக் கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் தி.வ. மீனாம்பிகை
முனைவர் சி. மணிவண்ணன்
முனைவர் த. செந்தில்குமார்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் பா. மதுகேஸ்வரன்
முனைவர் ம. தங்கபாண்டியன்
மருத்துவர் கா.தீ. கவிதா